**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**முன்னிலை : திரு.எ்ஸ்.பிரபா சந்திரன், பி.எல்.,**
**சார்பு நீதிபதி, அவிநாசி**

2019 ம் ஆண்டு ஜூன் திங்கள் 11 ம் நாள் செவ்வாய்கிழமை

**இடைநிலை மனு எண். 537/2018**
**-ன்-**
**அசல் வழக்கு எண். 390/2016**

K.C.முருகேசன் …மனுதாரர்

//எதிர்//

1, எஸ். அம்மாசைக்குட்டி
2. வள்ளியப்பன்
3. சுப்ரமணியம்
4. முத்துசாமி
5, கந்தசாமி
6. எஸ்.என். சுப்ரமணியன்
7. பப்பண்ணன் (என்கிற) பாபு
8. எம்.சுப்ரமணியம்
9. வெள்ளியங்கிரி
10. ராசாவு (எ) அர்ஜுனன்
11. என். சுப்ரமணியம்
12. ராஜேந்திரன்
13. விஸ்வநாதன்
14. லோகநாதன்
15. மயங்காத்தாள்
16. ராமாத்தாள்
17. பாலாமணி
18. சாவித்திரி
19. தமிழ்செல்வி
20. செந்தில்குமார்
21. சரஸ்வதி …எதிர்மனுதாரர்கள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக கடந்த 06.06.2019 தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. N.சதீஸ்குமார் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A.சின்னசாமி அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள்

வரை இந்திமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனுவானது அவிநாசி வட்ட ஆட்சியரை வாதி தரப்பில் சாட்சியாக விசாரணை செய்து ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதி அளிக்க கோரி பிரிவு 151-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**

அசல் வழக்கில் இந்த வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். இந்த வழக்கானது வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இடைநிலை மனு எண். 310/18 மனுவினையும், அதன் உத்தரவினையும் இந்த மனுவின் ஒர் அங்கமாக பாவிக்க வேண்டியது. மேற்படி இடைநிலை மனு எண்.310/18 மறுதளிப்பு மனுவில் இந்த வாதி தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய வேண்டுமென தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கு 01.01.1918 முதல் சிட்டா, அடங்கல் மற்றும் இனாம் B ரிஜிஸ்டர்களையும் தாக்கல் செய்ய அவிநாசி வட்ட ஆட்சியரை விசாரணை செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகவே அவிநாசி வட்ட ஆட்சியரை வாதி தரப்பில் விசாரணை செய்து மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதி அளிக்க வேண்டுமென மனுவில் சொல்லப்பட்டுள்ளது.

3. **எதிருரையின் சுருக்கம்**

மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல. தாவா சொத்திற்கான சிட்டா, அடங்கல் மற்றும் இனாம் B ரிஜிஸ்டரை தாக்கல் செய்ய அவிநாசி வட்ட ஆட்சியரை விசாரணை செய்து மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதி அளிக்க வேண்டுமென மனுவில் கூறியிருப்பது தவறானது. மேற்படி ஆவணங்களுக்கான பதிவு நகல்களை பெற்று தாக்கல் செய்யலாம். விதி. 75 (2)(3) சிவில் ரூல்ஸ் 1 பரிகாரத்தின்படி அனுமதி கோரப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை பெற வேண்டி தாக்கல் செய்வதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கானது 2005 ஆம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ளது. அப்படியிருக்க கடந்த 13 ஆண்டுகளாக மேற்படி ஆவணங்களுக்கான நகல்களை பெற வாதி நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ளார். ஆகவே மனுதாரர் காலம் தாழ்ந்து தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் இல்லை. இம்மனு அனுமதிக்கப்பட வேண்டியதா என்பதே தீர்மானிக்கப்படவேண்டியதாகும்.

5. மனுதாரர் தரப்பில், தாவா சொத்திற்கான சிட்டா, அடங்கல் மற்றும் இனாம் B ரிஜிஸ்டரை தாக்கல் செய்ய அவிநாசி வட்ட ஆட்சியரை விசாரணை செய்து, மேற்படி ஆவணங்களை குறியீடு செய்வது இவ்வழக்கிற்கு அவசியமானதாக உள்ளது. அவினாசி வட்ட ஆட்சியரை விசாரணை செய்து ஆவணங்களை குறியீடு செய்தால் தான் வாதியின் வழக்கை நிரூபணம் செய்ய இயலும். ஆகவே, இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென்று மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார்.

6. எதிம்னுதாரர் தரப்பில், தாவா சொத்திற்கான சிட்டா, அடங்கல் மற்றும் இனாம் B ரிஜிஸ்டர் ஆகியவற்றிற்கான சான்று நகல்களை மனுதாரர் பெற்று தாக்கல் செய்யலாம். அவிநாசி வட்ட ஆட்சியரை விசாரணை செய்ய காரணங்கள் எதுவும் இம்மனுவில் சொல்லப்படவில்லை. ஆகவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார்.

7. அசல் வழக்கானது கடந்த 2005 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு தற்போது பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கான சிட்டா, அடங்கல் மற்றும் இனாம் B ரிஜிஸ்டர் நகல்களை தாக்கல் செய்து அவிநாசி வட்ட ஆட்சியர் சாட்சியமளிக்க வேண்டியது அவசியமாக இருப்பதால் மேற்படி வழக்கின் விசாரணையை ரீ-ஓப்பன் செய்ய வேண்டுமென இம்மனுவில் சொல்லப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் அவிநாசி வட்டாட்சியரை விசாரணை செய்யவேண்டி தாக்கல் செய்த IA.No.538/18 மனுவானது இன்று இந்நீதிமன்றத்தால் இவ்வழக்கை ரீஓப்பன் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என தீர்மானித்து இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுக்கப்பட்டு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2019 ம் ஆண்டு ஜுன் 11 ம் நாள் உத்தரவு பகரப்பட்டது.

(ஒம்/-எஸ். பிரபா சந்திரன்)
சார்பு நீதிபதி,
அவிநாசி

**<u>மனுதாரர்  தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள்  தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை

(ஒம்/- எஸ். பிரபா சந்திரன்)
சார்பு நீதிபதி,
அவிநாசி

*(Compared with original order and uploaded in CIS by steno)*

அசல் / வரைவு உத்தரவு

இடைநிலை மனு எண். 537/2018
-ன்-
அசல் வழக்கு எண். 390/2016

நாள் 11.06.2019